**வியாங்கொடை மேம்பால செயற்திட்டம் - 2013**

---

வியாங்கொடை மேம்பால செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்த செயற்திட்டம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஸ்பெயினிலுள்ள பில்பாலோ விஸ்கயா அர்ஜன்டரியா எஸ்ஏ வங்கிக்கும் (பீபிவிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 மார்ச் 13 ஆம் திகதிய 2012015/எஸ்எல் ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் அமுலாக்கப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல் நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையழன் படி, முன்னைய நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சான தற்போதைய நெடுஞ்சாலைகள், உயர்கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பன முறையே செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவர்களாகும். வியாங்கொடை மேம்பாலத்தின் வடிவமைப்பு, வழங்கல் மற்றும் நிருமானித்தல் என்பன செயற்த்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக்கிரயம் ரூபா 2,433 மில்லியன் ஆனதுடன் அதில் யூரோ 11.2 மில்லியனிற்குச் சமனான ரூபா 1,883 மில்லியன் கடன் உடன்படிக்கையின் கீழ் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடுகாணப்பட்டதுடன் மீதியான ரூபா 550 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படவேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை 2012 ஒக்தோபர் 23 இல் ஆரம்பத்திருந்ததுடன் 2013 திசெம்பர் 22 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டது. செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2013 நெவம்பர் 08 இல் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பொறுப்பேற்கப்பட்டது.

**1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்**

---

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தன. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக்

கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் ஏற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டேன். ஆகையினால், எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்தான கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் குறித்துரைக்கப்பட்ட கடன் உடன்படிக்கையின் அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(உ) செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்தவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும் இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிர்த்தும்

(அ) செயற்திட்டமானது 2013 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2013 டிசெம்பர் 31

இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டதோ அந்த நோக்கங்களுக்காகவே அது பயன்படுத்தப்பட்டிருந்தது என்றும்

(இ) கடன் உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் தரப்பட்ட தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 1,675,174,940 தொகையாக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 1,949,049,789 தொகையாகும். மீளாய்வாண்டிற்கான செலவினம் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| மேம்பாலத்தின் கிரயம் | 1,649,938,124 | 268,764,065 | 1,918,702,189 |
| செயற்திட்ட முகாமைத்துவ கிரயம் | 23,479,468 | 5,110,784 | 28,590,252 |
| தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | 1,757,348 | - | 1,757,348 |
| | 1,675,174,940 | 273,874,849 | 1,949,049,789 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

யூ.கே. இரும்புப் பால செயற்திட்டம் என்றழைக்கப்படும் இன்னொரு செயற்திட்டம் தொடர்பான நடவடிக்கைகளிற்கென மீளாய்வாண்டில் செய்யப்பட்ட ரூபா 16,575,493 கூட்டுமொத்தத் தொகையான கிரயம் இந்தச் செயற்திட்டத்தின் கிரயமாக கருதப்பட்டதுடன் அதன் பிரகாரம் கணக்கிடப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | தொகை |
|---|---|
| | ரூபா |
| உறுகொடவத்தையில் ஒருவேலைத் தளத்தை நிர்மாணித்தல் | 2,142,843 |
| பதவியணியினர் வேதனங்கள் | 10,417,177 |
| ஒருங்கிணைப்பு அலுவலருக்கான சம்பளங்களும் படிகளும் | 472,500 |
| அலுவலக வாடகை | 3,542,973 |
| | 16,575,493 |

## 6. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் தரப்பட்ட தகவல்களின்படி, செயற்திட்டத்தின் நிதியளிப்பு பாதீட்டு ஏற்பாடுகள், மற்றும் 2013 திசெம்பர் 31 இல் முடிவவடைந்த ஆண்டில் செயற்திட்ட நிதிகளின் பயன்பாடு போன்றவை தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் படி நிதியளிக்க உடன்பட்ட தொகை | | 2013 இல் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு | 2013 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட நிதிகள் | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட நிதிகள் |
|---|---|---|---|---|---|
| | **யூரோ (மில்)** | **ரூபா (மில்)** | **ரூபா (மில்)** | **ரூபா (மில்)** | **ரூபா (மில்)** |
| ஸ்பெயின் | 11.22 | 1,883 | - | 1,366 | 1,883 |
| இலங்கை அரசாங்கம் | - | 550 | 200 | 60 | 63 |
| | 11.22 | 2,433 | 200 | *1,426 | 1,946 |

❖ ஆண்டு இறுதியிலுள்ள கொடுபடவேண்டியவைகள் உள்ளடக்கப்படாமையால் இந்த அறிக்கையின் 4 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையுடன் இந்தத்தொகை இணங்கவில்லை.

### 6.2 பயனற்ற செலவுகள்

செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவின் அலுவலகம் 2013 ஏப்ரல் மாதத்திலிருந்து புதிய வளவிற்கு மாற்றப்பட்டிருந்தது. எனினும், பழைய கட்டிடத்திற்கான 2013 மார்ச் மாத வாடகையாக மேலதிகமாக ரூபா 535,495 தொகையான வாடகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், பழைய கட்டிடத்திற்கான துப்புரவு செய்யும் கட்டணங்கள் 2013 ஏப்ரல் தொடக்கம் யூலை வரையான காலத்திற்காக ரூபா 66,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

### 6.3 பௌதிக செயலாற்றல்

செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2013 ஒக்தோபர் 23 இல் பூர்த்தி செய்யப்பட்டதுன் 2013 நொவம்பர் 08 இல் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குக் கையளிக்கப்பட்டிருந்தது.

### 6.4 செயற்திட்டத்தின் காணி சுவிகரிப்பு நடவடிக்கைகள்

செயற்திட்டம், மேம்பாலத்தின் நிர்மாணத்திற்காக 2013 திசெம்பர் 31 வரை 45 துண்டுக் காணிகளை சுவீகரிந்திருந்தது. எனினும், அத்தகைய சுவீகரிக்கப்பட்ட காணி சுவீகரிப்பு அதிகாரவீச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் பிரகாரம் காணி பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.